# இலங்கை கடற்படை கப்பல் மோதி மீனவர் உயிரிழந்த வழக்கு:புதுக்கோட்டை வட்டாட்சியர் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு

By DIN | Published on : 16th November 2021 02:22 AM | அ+ அ அ- | |

மதுரை: இலங்கை கடற்படை கப்பல் மோதியதால் கடலில் மூழ்கி உயிரிழந்ததாகக் கூறப்படும் கோட்டைப்பட்டினம் மீனவர் உடலை மறுபிரேதப் பரிசோதனை செய்யக் கோரிய மனுவின் மீது, புதுக்கோட்டை வட்டாட்சியர் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை திங்கள்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கடலில் மூழ்கி உயிரிழந்த மீனவர் ராஜ்கிரண் மனைவி பிருந்தா தாக்கல் செய்த மனு: புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் விசைப்படகு மீன்பிடி இறங்கு தளத்தில் இருந்து எனது கணவர் ராஜ்கிரண், சுகந்தன் மற்றும் சேவியர் ஆகிய 3 பேரும் அக்டோபர் 19-ஆம் தேதி நடுக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி மீன்பிடிப்பதாகக் கூறி தங்களது ரோந்து கப்பல் மூலம் மீனவர்களின் படகை இடித்துள்ளனர். இதனால், மீனவர்களின் படகு பழுதாகி நடுக்கடலில் மூழ்கியுள்ளது.

அதன்பின்னர், இலங்கை கடற்படையினர் மீனவர்கள் சுகந்தன் மற்றும் சேவியர் ஆகிய இருவரையும் மீட்டனர். கடலில் மூழ்கிய எனது கணவர் ராஜ்கிரண் 2 நாள்கள் தேடலுக்குப் பிறகு சடலமாக மீட்கப்பட்டார்.

ஆனால், கணவரின் உடலை பெட்டியில் எடுத்து வந்த இந்தியக் கடற்படையினர், என்னிடமும், உறவினர்களிடமும் முழுமையாகக் காட்டாமல் அடக்கம் செய்துவிட்டனர். இதனால், இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது. எனது கணவரின் சடலம் மீட்கப்பட்டபோது எடுக்க புகைப்படத்தில், அவரது முகத்திலும், உடலிலும் காயங்கள் இருந்துள்ளன.

எனவே, எனது கணவர் இறப்பு தொடர்பாக, தமிழக போலீஸாார் வழக்குப் பதிவு செய்யவும், அவரது உடலை மறுபிரேதப் பரிசோதனை செய்து உண்மையைக் கண்டறியவும் உத்தரவிட வேண்டும் என அதில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு, ஜி.ஆர். சுவாமிநாதன் முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, மனுதாரரின் கணவர் ராஜ்கிரண் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளாரா? எனக் கேள்வி எழுப்பினார். தொடர்ந்து நீதிபதி, இது குறித்து கோட்டைப்பட்டினம் வட்டாட்சியர் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணையை நவம்பர் 17-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.